Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

27.11.2020 வெள்ளிக்கிழமை


## புதினம் தெரியுமோ?

இன்றைய நாள் தமிழ் மக்களுக்கு புனிதமான நாள் கண்டியளே. தமிழ் மக்களின்ட உரிமையளுக்காகத் தங்கட இன்னுயிர்களை ஈந்த செல்வங்கள நினைவேந்தும் நாள். முதல் இருந்த அரசு நினைவேந்தல் நடந்த முட்டுக்கட்டை போடாம இருந்தது. இப்ப இருக்கிற அரசு நினைவேந்தல் நடத்திறதுக்கு எவ்வளவு தடை போட முடியுமோ அந்தளவுக்குத் தடையளை போட்டிருக்கு கண்டியளே. அதுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை 02

# அழுத்தங்களுக்கு அடிபணியோம்!



கொழும்பு, நவம்பர் 27


அரசின் அழுத்தங்கள்மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளை ஒருபோதும் அழிக்கமுடியாது. உயிரிழந்தவர்களை நிச்சயம் நினைவுகூருவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். 02

# நாடாளுமன்றத்தில் மாவீரருக்கு அஞ்சலி

கொழும்பு, நவ.27

இலங்கை நாடாளுமன்றத்தில் இன்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இன்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

நாடாளுமன்றில் நடந்த குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், "இந்த மண்ணுக்காக மரணித்த இன்று நினைவுகூரப்படுகின்ற மாவீரர்களுக்கு இந்த சபை 02



## பிறந்தநாள் கொண்டாட்டம் 26 பேர் கைது

கொழும்பு, நவ.27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டிய, முகநூல் ஊடாகப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தவர்களைப் பொலிஸார் 02

## கரவெட்டி பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்!

கொழும்பு, நவ.27

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. 31 உறுப்பினர்களைக் கொண்ட கரவெட்டிப் பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 02

## வவுனியாவில் 20 பேர் தனிமையில்

யாழ்ப்பாணம், நவ.27

வவுனியா பெரியகட்டு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் 20 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. 05

## கைதிகள் 22 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ.27

சிறைக்கைதிகள் 22 பேருக்குக் கொரொனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 12 கைதிகள் வெலிகடைச் சிறையிலும், 9 கைதிகள் பூஸா சிறையிலும் மற்றொருவர் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து சிறைகளில் கொரோனா 02



## முல்லையில் கடை பூட்டு ராணுவத்தினர் கெடுபிடி

முல்லைத்தீவு, நவ.27

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதிகளில் இன்று வணிக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்த நிலை யில், அங்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் வீதிகளில் குவிக்கப்பட்டிருந்தனர். அதனால் 02

## முல்லைத்தீவில் 162 பேர் தனிமை

முல்லைத்தீவு, நவ.27

முல்லைத்தீவில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 162 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்குள்ள விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில், கொழும்பு விமானப் படைத் தளத்தில் பணியாற்றிய 145 பேர் கடந்த வாரம் கொண்டுவரப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டனர். 02

## காணாமல் ஆக்கப்பட்டோரின் பட்டியல் வெளியிட்ட ஓ.எம்.பி.

கொழும்பு, நவ.27

காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களின் பட்டியல் ஒன்றை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. இந்த விவரங்களை கொழும்பில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், மன்னார் மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்களில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட் 02

## கட்டாய வாக்குமூலம் பொலிஸிடம் விளக்கம்

கொழும்பு, நவ.27

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்று சந்தேகிக்கப்படும் கைதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சியங்களாக முன்வைக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், வலுக் கட்டாயமாக பெறப்பட்டமை தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள், தமது குற்றங் 02

# அழுத்தங்களுக்கு...

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இறந்தவர்களை நினைவுகூருவதென்பது எமது மரபாகும். பண்டார வன்னியனுக்கான நினைவு கூரல்கூட அவருக்கான நாளில் இடம்பெறுகின்றது. எனினும், இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வை இந்த அரசாங்கம் தடுத்துள்ளது. பொலிஸாருக்கு அழுத்தங்கள் பிரயோகித்து நீதிமன்றங்கள் ஊடாக தடைஉத்தரவு பெறப்பட்டுள்ளது.

போராளியாக இருக்கலாம், பொது மக்களாக இருக்கலாம், அவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் மலர்தூவி, தீபமேற்றி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு இருக்கின்றது.

அஞ்சலி செலுத்தும் நிகழ்வை ஏன் அரசாங்கம் அவசர அவசரமாக நிறுத்த வேண்டும்? சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அதிகாரிகளை அனுப்பி இதனை தடைசெய்வதன் நோக்கம் என்ன?

வடக்கு, கிழக்குக்கு வெளியில் எமது மக்கள் இன்று மாலை 6.05 மணிக்கு அஞ்சலி செலுத்துவார்கள். அரசின் அழுத்தங்களால் எங்கள் உணர்வுகளை ஒருபோதும் அழிக்கமுடியாது.என்றார்.(எ-44)

# புதினம் தெரியுமோ

செய்யப்பட்டது எண்டும், கொரோனா நிலைமை எண்டும் நூற்றியெட்டுக் கதை சொல்லினம் கண்டியளே.

சரி அதை விடுங்கோ, இண்டைக்கு குருதிக்கொடை குடுக்கப் போன ஆக்களையும் ஆஸ்பத்திரி வாசலில நிண்டு சி.ஐ.டி. காரர் திருப்பி அனுப்பியிருக்கினம் எண்டா பாருங்கோ. இவையளை எண்ணெண்டு சொல்லுறது.

இண்டைக்குத் தெல்லிப்பளைக்கு இரத்தம் கொடுக்கச் சென்ற ஆக்கள ஆஸ்பத்திரிக்குள்ள நிண்டு திரும்பி அனுப்பியிருக்கினம். டொக்டர் மாரும் அதப்பாத்தும் பாக்காத மாதிரி இருந்திட்டினம்.

அரசு எவ்வளவு குரூரமா நடந்துகொள்ளுது பாருங்கோ. இப்பிடிச் செய்தோன சனம் எல்லாத்தையும் மறந்து நினைவேந்தலை விட்டிடும் என்று நினைக்கிறது எவ்வளவு முட்டாள்தனம் பாருங்கோ. இப்பிடித் தடுக்கத் தடுக்கத்தான் இன்னும் இன்னும் மக்கள் நினை வேந்தலை எழுச்சியா செய்வினம் எண்டதுதான் உண்மை. பட்சி

# கரவெட்டி பிரதேச....

ஆளுகைக்கு உட்பட்டது. சபையின் வரவு செலவுத் திட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் த.ஐங்கரனால் சபையில் முன்வைக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்துக்காக நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் ஆதரவாக 16 பேரும், எதிராக 14 பேரும் வாக்களித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் என 16 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 7 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்திருந்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை.(எ-26)

# நாடாளுமன்றத்தில்...

யில் அஞ்சலி செலுத்துகின்றேன்” என்று குறிப்பிட்டார்.

அவரது உரையில் மேலும் தெரிவித்ததாவது

காணி பிரச்சினை என்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. காணி ஆக்கிரமிப்புக்கள் அரங்கேறியமையால்தான் மண்ணை மீட்பபதற்காக ஆயுதம் கூட ஏந்திப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றும் காணிப் பிரச்சினை தொடர்கின்றது. சரணாலயம், தொல்பொருள் என்ற போர்வையில் எங்கள் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அதேவேளை, எமது பகுதியிலுள்ள மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமையில் இருந்து அவர்களால் மீள முடியாதுள்ளது. அவர்களுக்கு அரசாங்கம் நேசக்கரம் நீட்டவேண்டும். காப்புறுதி திட்டமும் அறிமுகப்படுத்த வேண்டும். கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகள் தளர்த்தப்படவேண்டும்.என்றார்.(எ44)

# கட்டாய....

கள் தொடர்பில் அளித்த அறிக்கைகளின் உண்மைத் தன்மைத் தொடர்பில் எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென்று இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.சி.விக்ரமரத்னவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

கைதிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க கட்டாயப்படுத்தப்படுகின்றது என்று பொலிஸ் ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

"சிங்களத்தில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் கையெழுத்திட பல முறை பொலிஸ் தலைமையகத்துக்குச் செல்ல வேண்டிய நிலைமை, அறிக்கையில் கையெழுத்திட்டால் விடுதலை செய்வதாக உறுதியளித்தல், கையெழுத்திடாவிட்டால் தவறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதாக அச்சுறுத்தல் விடுத்தமை ஆகியவை இதில் அடங்கும்" என மனித உரிமைகள் ஆணையாளர் ரமணி முத்தெட்டுவேகம பொலிஸ் மாஅதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து சித்திரவதை செய்தல் மற்றும் புரிந்துகொள்ள முடியாத சிங்களத்தில் ஒரு அறிக்கை அல்லது வெற்று தாளில் கையெழுத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட மனித உரிமைக் குழுக்கள் பலமுறை நம்பகமான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய கைதிகள் "வாக்குமூலம் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளனர்" என பொலிஸ் ஒப்புக்கொண்டுள்ளது. "உங்களுக்கு தெரிந்த வகையில், சான்றுகள் கட்டளைச் சட்டத்தின் 24ஆவது பிரிவின் கீழ் தானாக முன்வந்து சமர்ப்பிப்பதன் அடிப்படையில் மாத்திரமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியும்" என மனித உரிமைகள் ஆணையாளர் நினைவுபடுத்தியுள்ளார்.

பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகளின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்க வேண்டும் என்று, மனித உரிமைகள் ஆணையாளர் ரமணி முத்தெட்டுவேகம பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(எ-இ)

# காணாமல்...

டோர் தொடர்பான அலுவலகத்துக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள், மாவட்ட செயலகங்கள் ஊடாக பெறப்பட்டு பின்னர் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் பேரில் ஆயுதப் படையினரால் வழங்கப்பட்ட போரில் காணாமல்போன படையினரின் விவரம் ஆகியவற்றின் அடிப்படையில் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் காணாமல்போனோரின் உறவினர்களிடம் இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்களை காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் மீளாய்வு செய்வதுடன், ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அவற்றை அறிவிக்க முடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# கைதிகள்...

தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 821 ஆக அதிகரித்துள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்போது 323 பேருக்கும், பூஸா சிறையில் 70 பேருக்கும் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் கொரோனா தொற்றுடன் அடையாளங்காணப்பட்டோரின் எண்ணிக்கை 46 ஆகப் பதிவாகியுள்ளது என்று சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். சிறை அதிகாரிகள் 46 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 3 பேர் குணமடைந்துள்ளனர். தொற்றுக்கான 113 கைதிகள் இதுவரை குணம டைந்துள்ளனர். (எ-இ)

# பிறந்தநாள்...

கைது செய்துள்ளனர்.

ஏறாவூரில் 23 பேரும், கஞவாஞ்சிக்குடியில் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர். கைது செய்யப்பட்டவர்களில் தமிழரசுக் கட்சியின் வாலிபர் அணியைச் சேர்ந்த இருவரும் உள்ளடங்குகின்றனர் என்றும், இவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# முல்லைத்தீவில்...

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 6 பேருக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்த 6 பேரும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

59ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் மத்திய கிழக்கில் இருந்து வந்த 24 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். தற்போது இரு தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் 162 பேர் கண்காணிப்பில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-19)

# முல்லையில்...

அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

உணவகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் பூட்டப் பட்டுள்ளது. பூட்டப்பட்டுள்ள வணிக நிலையங்களைத் திறக்குமாறு வணிக நிலைய உரிமையாளர்களுக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் அழுத்தம் கொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதே நேரம் வணிகர் சங்கத் தலைவர்கள் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர் என்றும் தெரியவந்துள்ளது. (எ-19)

# திருகோணமலையில் இராணுவம், பொலிஸ் கெடுபிடிகள் அதிகரிப்பு

திருகோணமலை, நவ.27

வடகிழக்கு பிரதேசங்களில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்ற இடங்களில் ஆயுதம் தாங்கிய அதிகமான பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் குடியிருக்கும் முக்கிய பிரதேசங்களான மூதூர் கிழக்கு, திருகோணமலை நகரம், சாம்பல்தீவு, ஆலங்கேணி,பள்ளிக்குடியிருப்பு உட்பட பல பிரதேசங்களிலும் இந்துக்கோயில் முன்றல்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (வ-40)



# மஸ்தானின் படத்தை சேதமாக்கிய விசமிகள்

வவுனியா,நவ.27

வீதிகள் வேலைத்திட்ட பதாதைகளில் காணப்பட்ட மஸ்தானின் புகைப்படம் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

அமைச்சரால் திரை நீக்கம் செய்யப்பட்ட வீதி வேலைத்திட்ட பதாதைகள் கிழித்தெறியப்பட்டுள்ளன. 3 கிலோமீற்றர் நீளமான வவுனியா கற்பகபுரம் பிரதான வீதி மற்றும் 1.7 கிலோமீற்றர் நீளமான பாலாமைக்கல் வீதி ஜனாதிபதியின் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வேலைத்திட்டத்தின் கீழ் காப்பற் இடும் பணிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

குறித்த புனரமைக்கான ஆரம்பப் பணிகளை கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோரால் இந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பிரதமர் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆகியோரின் புகைப்படங்களுடன் கூடிய பதாதைகளும் திறக்கப்பட்டன.

இவ்வாறு திரைநீக்கம் செய்யப்பட்ட பதாதைகளில் காட்சிப்படுத்தப்பட்ட அரசியல் பிரமுகர்களின் படங்கள் கிழித்தெறியப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. ஒரு பதாதையில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் புகைப்படம் மட்டும் வெட்டியகற்றப்பட்டுள்ளது. (க-ரி3)

# பொலிஸ் அதிகாரிக்கு கொரோனா இல்லை

கொழும்பு, நவ.27

கொள்ளுப்பிட்டிய பொலிஸ் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு தொற்று இல்லை என்பது பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பொலிஸ் பொறுப்பதிகாரி, கொழும்பு காலி முகத்திடலில் நேற்றுக் காலை உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த போது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# ஷானி அபேசேகரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.27

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பிணை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் அன்றையதினம் தீர்ப்பளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஷானி அபேசேகர, உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோரின் பிணை மனுக்கள், கம்பஹா மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த போதே நீதிபதி நிமல் ரணவீர இதனை அறிவித்தார். (வ-இ)

# 24 மணி நேரத்தில் 84 பேர் கைதாகினர்

கொழும்பு, நவ.27

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 84 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 744 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# இ.போ.ச பயணிகளுக்கு கொரோனாக் காப்புறுதி

கொழும்பு, நவ.27

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு கொவிட் காப்புறுதி நிதி எனும் விசேட பாதுகாப்பு காப்பீட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இ.போ.ச பேருந்தில் பயணித்து பயணி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், அவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், அதேபோன்று, பயணி ஒருவர் தொற்றினால் உயிரிழந்தால் அவருக்காக 50ஆயிரம் ரூபா காப்பீடும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள பயணிகள் தமது பயணச் சீட்டை வைத்திருக்க வேண்டியது கட்டாயமென இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

கொரோனாத் தடுப்பு தேசிய செயலணி, இ.போ.ச புலனாய்வுப் பிரிவு, சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருத்துவர்களால் பயணி ஒருவர் இ.போ.ச பேருந்தில் பயணித்துத் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்த நிதி வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# இரத்தினபுரி பாடசாலைகள் மறுஅறிவித்தல் வரை பூட்டு

இரத்தினபுரி, நவ.27

இரத்தினபுரி, எஹலியாகொடை கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. எஹலியாகொடை, திவுரும்பிட்டிய பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் 44 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## எத்தியோப்பியாவில் சிக்கியிருந்த
# 38 இலங்கையர்கள் பாதுகாப்பாக மீட்பு

கொழும்பு, நவ.27

எத்தியோப்பியாவில் யுத்த பகுதிகளில் சிக்கியிருந்த 38 இலங்கையர்கள் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் உதவிகளுடன் மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. எத்தியோப்பியாவின் வடக்கு பிராந்தியத்தில் மூன்று வாரங்களாக இடம்பெற்ற மோதலில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது. (வ-இ)

# வரையறைகளுடன் நீதிமன்ற நடவடிக்கை

கொழும்பு, நவ.27

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நீதிமன்ற நடவடிக்கைகளை வரையறைகளுடன் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அவசர சந்தர்ப்பங்களில் மாத்திரம் நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 18 பொலிஸ் பிரிவுகளும் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (வ-இ)

# ஷானி அபேசேகரவின் பாதுகாப்பை உறுதிசெய்வது அரசின் கடமை

## டுவிட்டர் பதிவில் மக்கள் வலியுறுத்து

கொழும்பு, நவ.27



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் சுகாதாரநலனையும் பாதுகாப்பையும் உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஷானி அபேசேகர கிரித்தலேயில் உள்ள இராணுவ முகாமுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என வெளியான தகவல்கள் உண்மையானவையா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-இ)

# பொகவந்தலாவவில் 6 பேருக்குத் தொற்று

நுவரெலியா, நவ.27

நுவரெலியா பொகவந்தலாவ பகுதியில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் புறக்கோட்டை, புளுமென்டல், பம்பலப்பிட்டி போன்ற பகுதிகளிலிருந்து கடந்த 17ம் திகதி தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். இந் நிலையில் இப் பகுதியில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 46 பேரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை முடிவுகளின்படி இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த 6 பேரும் கொரோனா சிகிச்சை முகாம்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ந -இ)

# ஊழியர் பஸ் சேவை மீள ஆரம்பமானது

கொழும்பு, நவ.27

ஊழியர் போக்குவரத்து சேவைகள் இன்று தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் கமாண்டர் நிலான் மிரான்டா தெரிவித்துள்ளதாவது, ஊழியர் போக்குவரத்து சேவைக்காக 150 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் பிரிவுகளைச் சேர்ந்த 20 நிறுவனங்கள் இதற்குப் பதிவு செய்துள்ளன. அனைத்து நாள்களிலும் பேருந்துகள் காலை 8.30 அளவில் பதிவு செய்துள்ள நிறுவனங்களுக்கு அருகில் செல்லும் வகையிலும் மாலை 4.30 அளவில் அங்கிருந்து புறப்படும் வகையிலும் பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



பிரான்ஸ் தமிழ் வானொலியின் பூமணி அம்மா அறக்கட்டளையினரின், யாழ்ப்பாணத்துக்கான தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரனால், இளவாலை ஜே/155 கிராம சேவகர் பிரிவில் 20 குடும்பங்களுக்கு, சுமார் 2 ஆயிரம் பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் யாழ்ப்பாணம் ஜே.80 கிராம அலுவலர் பிரிவில் வாழும் 3 பிள்ளைகளின் தாயார் ஒருவருக்கு 20 கோழிகளும், கூடும் கையளிக்கப்பட்டன. (க-இ)

# கட்டுநாயக்கவில் நவீன பி.சி.ஆர் இயந்திரங்கள்

கொழும்பு, நவ.27

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதிய மேம்படுத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்கள்(ஆர்.என்.ஏ மற்றும் டி.என்.ஏ ஒளிசுழற்சிக் கருவிகள்) மற்றும் 39 ஆயிரம் கொவிட் - 19 பி.சி.ஆர் பரிசோதனைக் கருவிகள் ஆகியன நிறுவப்பட்டிருக்கின்றன. இத் திட்டத்துக்கான நிதியுதவியை சுவிட்சர்லாந்து அரசாங்கம் வழங்குகின்றது.

இதன்மூலம் புலம்பெயர் தொழிலாளர்களை பாதுகாப்பாக மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவதற்கும் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக விமான நிலையங்களை மீளத் திறப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இந்தப் புதிய இயந்திர வசதியின் ஊடாக நாளொன்றில் சுமார் 4 மணித்தியாலங்களுக்குள் ஆயிரத்து 300பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்க முடியும். (ந-இ)



# துறைமுக முனையங்களின் செயற்பாடுகள் வழமைக்கு

கொழும்பு,நவ.27

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான அனைத்து முனையங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகள் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்புகின்றன என்று இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

CICD மற்றும் SAGD முனையங்களுடன் இணைந்து துறைமுக அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் தொற்று நிலைமை காரணமாக கடந்த வாரத்தில் துறைமுக முனையங்களின் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

துறைமுக அதிகார சபை மேற்கொண்ட சுகாதார நடவடிக்கைகள் காரணமாக, அனைத்து நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோருக்கு துறைமுக சேவைகள் மற்றும் முனையங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால், அது தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

0112 320 405 மற்றும் 071 688 94 52 ஆகிய இலக்கங்களுடன் அழைப்பை ஏற்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். என்றுள்ளது. (க-இ)

# விடுவிக்கப்படும் கைதிகள் 14 நாள்கள் தனிமையில்

கொழும்பு, நவ.27

பிணையில் செல்லும் அல்லது விடுதலை செய்யப்படும் சிறைக் கைதிகளை 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தி பின்னர் வீடுகளுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பி.சி.ஆர் பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் பல்லேகல மற்றும் வீரவில உள்ளக சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளனர். தற்போது, கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்கு மாத்திரம் இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளது. இதுவரை வெலிக்கடை, கொழும்பு மெகசின், கொழும்பு விளக்கமறியல், மஹர, குருவிட்ட மற்றும் பழைய போகம்பறை சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# சீரமைக்கப்படும் வரணி- வேம்பிராய் வெள்ளத்தால் மக்கள் அவலம்!

கொடிகாமம், நவ. 27



வரணி வேம்பிராய் வீதியில் குமரணி பாடசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் பால வேலைகள் இன்னமும் பூர்த்தி அடையாததால் மாற்று ஏற்பாடாக அமைக்கப்பட்டுள்ள பாதையூடாக வெள்ளம் பாய்கின்றமையால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். அமைக்கப்பட்ட தற்காலிக பாதையில் குழாய்கள் வைக்காததால் மழை வெள்ளம் பாய்ந்தோட வழியில்லாமல் தற்காலிக பாதைக்கு மேலாக பாய்கிறது. தற்காலிக பாதைக்கு இரண்டு சீமெந்து குழாய்கள் பொருத்தி தண்ணீரை வழிந்தோடச் செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-159)

# 160 மில்லியன் தடுப்பு மருந்து ஐ.ஒ ஒப்பந்தம்

லண்டன், நவ. 27

80 மில்லியன் பேர் பயனடையும் வகையில் 160 மில்லியன் முறை செலுத்தக்கூடிய தடுப்பு மருந்துக்கான ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்க உயிர்மருத்துவத் தொழில்நுட்ப நிறுவனமான மொடர்னாவுடன் ஐரோப்பிய ஒன்றியம் செய்து கொண்டுள்ளது.

தடுப்பு மருந்து தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை 6 மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன்படி 2 பில்லியன் முறை செலுத்தப்படக்கூடிய தடுப்பு மருந்துகளுக்கான ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# 300,000 குழந்தைகள் எச்.ஐ.வியால் மரணம்

நியூயோர்க், நவ.27

எச்.ஐ.வி தொற்றால் கடந்த ஆண்டில் மாத்திரம் 3 லட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ஒவ்வொரு 100 விநாடிக்கும் ஒரு முறை குழந்தை அல்லது 20 வயதுக்குட்பட்ட இளைஞருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 50 சதவீதத்துக்கும் சற்றே குறைவாயுள்ள குழந்தைகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சைகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-இ)



# விவசாய மசோதாவை எதிர்த்துப் போராட்டம்

## டில்லியில் விவசாயிகள் முன்னெடுப்பு

புதுடில்லி, நவ. 27

இந்திய மத்திய அரசின் புதிய விவசாய மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆறு மாநிலங்களின் விவசாயிகள் தலைநகர் டில்லியில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உத்திரபிரதேஷ், பஞ்சாப், ஹரியானா, உத்தராகண்ட், ராஜஸ்தான் மற்றும் கேரள மாநில விவசாயிகள் டெல்லியை நோக்கி படையெடுத்துள்ளனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சில இடங்களில் விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தியுள்ளனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. விவசாயிகள் மீதான தாக்குதலுக்கு டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (வ-இ)



## வவுனியாவில்...

கொரோனா தொற்றால் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர். அவர் தனிமைப்படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

வவுனியா, பெரியகட்டு தனிமைப்படுத்தல் மையத்தில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 20 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.(எ-20,111)

# ஓமானிலிருந்து நாடு திரும்பிய 17 பேர் விபத்தில் சிக்கி காயம்

## தனிமைப்படுத்தலுக்காக அழைத்து வந்தபோது சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.27

ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பிய 25 பயணிகளை யாழ்ப்பாணம் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு ஏற்றிவந்த சொகுசு பேருந்து கட்டுப்பாட்டை இழந்து, கிளி நொச்சி, பளை ஆனைவிழுந்தான் பகுதியில் விபத்துக்குள்ளானது. இன்று காலை 9.45 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்துகொண்டிந்த அந்தப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, நீர் விநியோகக் குழாய் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது பேருந்தில் பயணித்த 17 பேர் காயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த 3பேர், உடனடியாக அம்புலன்ஸ் வண்டி ஊடாக யாழ்.போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பிய 254 பேர் தனிமைப்படுத்தலுக்காக விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு, 11 பேருந்துகளில் அழைத்துவரப்பட்ட நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்தில் சுகாதாரப் பிரிவினர், படையினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளை மேற்கொண்டனர். (ப)

